# FIRST INFORMATION REPORT

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8044388

1. District : மாவட்டம் பெரம்பலூர் PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 01 Date: நாள் 29.3.2023

2. (i) Act சட்டம்: The Prevention of Sections பிரிவுகள்: Sec. 7
   (ii) Act சட்டம்: Corruption Act-1988 Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: (as amended in 2018) Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் [illegible], கடைசி வாரம் Date to : நாள் வரை 28.3.23 வரை
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல் பிப்ரவரி 2023 முதல் 28.3.23 வரை Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.3.23 Time : நேரம் 06.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 29.3.23 Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் தென் மேற்கு 2 km
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி EO, அலுவலகம், அருள்மிகு மதன கோபால சுவாமி திருக்கோவில் பெரம்பலூர் மற்றும் வாசியான் ஜவான் கடை, காந்தி நகர், பெரம்பலூர்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. சிங்காரம் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S/o இருப்புசாமி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது 35 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் நாவிதர் (g) Address : முகவரி No 159, கடைவீதி, காந்திநகர், பெரம்பலூர் தெற்கு கிராமம். பெரம்பலூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   ரவி, எழுத்தர், அருள்மிகு மதனகோபாலசுவாமி திருக்கோவில், பெரம்பலூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

இன்று 29.03.2023-ம் தேதி காலை 06.30 மணிக்கு பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது திரு K.சிங்காரம் என்பவர் என் முன் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தை 07.00 மணிக்கு பதிவு செய்தேன். அந்த புகார் வாக்குமூலம் பின்வருமாறு. வாக்குமூலம் K.சிங்காரம் வயது 35, த.பெ குப்புசாமி, 159, கடைவீதி, காந்திநகர், பெரம்பலூர் தெற்கு கிராமம், பெரம்பலூர் மாவட்டம். நான் பெரம்பலூர் தெற்கு கிராமம், காந்திநகரில் என் மனைவி மற்றும் மகளுடன் வாடகை வீட்டில் வசித்து வருகிறேன். எங்களுக்கு சொந்தமாக சிங்காரம் சலூன் என்ற பெயரில் கடை இதே தெருவில் எண்.35-ல் உள்ளது. இதன் சர்வே எண்.235/27 ஆகும். இதன் பின்புறம் பெரம்பலூர் நகர் அருள்மிகு மதனகோபாலசுவாமி திருக்கோவிலுக்கு சொந்தமான நிலம் உள்ளது. நான் சொந்தமாக சலூன் கடை வைத்திருந்தாலும், இக்கோவிலில் வேலை வரும் போது நாவிதராக வேலை செய்கிறேன். திருக்கோவில் தேருக்கு எண்ணெய் போடும் பணி மற்றும் கலசம் சுத்தம் செய்யும் வேலையும் செய்து கோவிலுக்கு ஊழியம் செய்து வருகிறேன். (Separate Sheet Enclosed)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

T.R. 29/3/23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு K.சிங்காரம்

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 29/3/23
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் T. Rameshwari
Rank: நிலை Inspector No. எண் ..........

பெரம்பலூர் ஊ.த.க பிரிவு கு.எண்-01/2023 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

என் கடைக்கு பின்புறம் உள்ள சுமார் 10 அடி கோவில் இடத்தையும் சேர்த்து நாங்கள் பல வருடங்களாக அனுபவத்தில் புழங்கி வந்தோம். திருமதி.அனிதா என்ற கோவில் நிர்வாக EO மேடம் இருந்த போது கோவில் இடத்தில் நாங்கள் கட்டியிருந்த எங்கள் அனுபவத்தில் இருந்த சுவற்றை இடித்து அப்புறப்படுத்திவிட்டதால் அதன்பின் அந்த இடத்தை நான் பயன்படுத்தவில்லை. இது குறித்து நான் கோவில் நிர்வாகத்திடம் விசாரித்த போது நீ கோவில் இடத்தை குத்தகைக்கும் எடுக்கவில்லை தரைவாடகையும் கட்டவில்லை என்பதால் அப்புறப்படுத்திவிட்டோம் என்றனர். எனவே, நான் 6 மாதங்களுக்கு முன்பு மேற்படி பயன்படுத்திய இடத்தை தரைவாடகை அல்லது குத்தகைக்கு வேண்டும் என பெரம்பலூர் மதனகோபாலசுவாமி கோவில் EO அலுவலகம் சென்று கேட்டேன். அப்போது அங்கு பணியில் இருந்த எழுத்தர் திரு.ரவி மேற்படி கோவில் இடத்தைப் பெற உள்ளூரில் போட்டி அதிகமாக இருப்பதாகவும், அதிகாரிகளிடம் சொல்லி தான் அந்த இடத்தை உனக்கு வாங்கி கொடுக்க வேண்டும் என்றும், அதற்கு ரூ.10,000 பணம் லஞ்சமாக தனக்கு வேண்டும் எனவும் கேட்டார். நான் அவ்வளவு பணம் இல்லை என தெரிவித்துவிட்டு வந்துவிட்டேன். பின்னர் அவர் பிப்ரவரி மாத கடைசிலும், மார்ச் மாதம் 2வது வாரத்திலும், என்னை என் சலூன் கடையிலும், தெருவிலும் பார்க்கும் போதெல்லாம் உனக்கு என்னால் மட்டுமே கோவில் இடத்தை பெற்றுதர முடியும். நீ என்னை விட்டு எந்த அதிகாரியை பார்த்தாலும் உனக்கு வேலை நடக்காது. உனது பெட்டிசனை நான் தான் நம்பர் போட்டு பதிவு செய்யனும். இந்த Office-ல் நான்தான் நீண்ட காலமாக இருக்கிறேன். நான் சொன்னால்தான் அதிகாரிகள் செய்வர். நான் நினைத்திருந்தால் இதற்கு முன்பே கோவில் இடத்தில் உன் அனுபவத்தில் இருந்த சுவரை இடிக்கவிடாமல் தடுத்திருக்க முடியும். எனவே, உனக்கு உன் அனுபவத்தில் இருந்த கோவில் இடம் வேண்டும் என்றால் எனக்கு ரசீது பணம் தவிர ரூ.10,000 லஞ்சமாக கொடு என்று கேட்டார். அதற்கு நான் அவ்வளவு பணம் இல்லை, கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்று கேட்டதற்கு கோவில் நிர்வாக அலுவலகம் எழுத்தர் திரு.ரவி 10,000 ரூபாயில் ஒரு பைசா கூட குறைக்க முடியாது என்று சொல்லிவிட்டார். மேலும் கடந்த 13.03.2023-ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் திரு.ரவி என் கடைக்கு வந்து நீ பணம் ரெடி பண்ண இன்னும் டைம் எடுத்துக்கொள். நான் ஊருக்கு போய்விட்டு கோவில் கொடியேற்ற திருவிழா 28.03.2023-ம் தேதி அன்று ஆபிஸ் வருவேன். நீ எனக்கு அன்று பணம் கொடுக்கவிட்டால் நான் உள்ளூரில் ஏற்கனவே இந்த இடத்தை பெற போட்டி போட்டு கொண்டு எனக்கு பணம் கொடுக்க தயாராக உள்ளவர்களுக்கு ரசீது போட்டு இடத்தை கொடுத்தவிடுவேன். பின்னர் நீ வருத்தப்பட்டு பிரயோஜனம் இல்லை என்றார். நான் நில குத்தகை வாடகை ரசீது கண்டிப்பாக என் பெயரில் போட்டு தருவீர்களா என கேட்டப்போது நீ முதலில் எனக்கு ரூ.5,000 பணத்தை எனக்கு கொடு. நான் பணம் பெற்ற இரண்டு நாட்களில் உனக்கு ரசீது கொடுக்கிறேன். ரசீதை நீ வாங்கும் போது எனக்கு கொடுக்க வேண்டிய மீதி பணம் ரூ.5,000 கொடுத்து விடு என்று கூறினார். அதேபோல் 28.03.2023-ம் தேதி

என்னை பார்த்தபோது நீ ரூ.5,000 பணத்தை நாளை என்னிடம் கொண்டுவந்து கொடு என்றார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாததால் என்னிடம் உள்ள ரூ.5,000 பணத்துடன் பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்திற்கு இன்று 29.03.2023-ம் தேதி காலை நேரில் ஆஜராகி பெரம்பலூர் அருள்மிகு மதனகோபாலசுவாமி திருகோவில் நிர்வாக அலுவலக எழுத்தர் திரு.ரவி மீது புகார் வாக்குமூலம் கொடுக்கிறேன். நான் 5-ஆம் வகுப்பு வரை மட்டுமே படித்துள்ளதால் எனக்கு வேகமாக எழுத, படிக்க வராததால் நான் சொல்ல இந்த புகார் வாக்குமூலத்தை நீங்கள் அலுவலகத்தில் பதிவு செய்தீர்கள். தொடர்ந்து என்னிடம் லஞ்சம் கேட்டு வற்புறுத்தும் திரு.ரவி மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். படிக்கக்கேட்டேன் சொன்னபடி சரியாக உள்ளது. (கையொப்பம்) xxxxx K.சிங்காரம் 29.03.2023. **Submitted**, Sir, Recorded the statement by me on today 29.03.2023 at 0700 hrs, verified and ascertained its genuineness through sources, and registered a case in Perambalur Vigilance and Anti-Corruption Detachment Crime No.01/2023, u/s 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018). On 29.03.2023 at 08.00 hrs (sd) T.Rameswari, Inspector of Police, Vigilance and Anti-Corruption, Perambalur. I am submitting the Original F.I.R. along with the statement of the complainant to the Hon'ble Chief Judicial Magistrate/Special Judge court, Perambalur and the copies of the F.I.R to all other concerned Officials.

T.R.
29.3.23
T. Rameswari
Inspector of Police
V&AC, Perambalur